# அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் ஸ்ரீ சுவர்ணாம்பிகை உடனுறை சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

கணபதி துதி

மூலமுதல்வனை, முக்கண்ணன் மைந்தனை
சலத்திருவினை, செம்மாங்கனி பெற்றுயர்ந்தோனை
ஞானச்சுடர் விளக்கை, ஞாலம்புகல் தெய்வத்தை
ஆனை முகத்தனை, அருள் வழங்க வேண்டுவமே

## திருக்கோயில் அமைவிடம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனும் முதுமொழிக்கேற்ப , பாரதத் திருநாட்டில், சைவம் தழைத்தோங்க, பக்திப் பயிர் வளர்க்கும் சிவத்தலங்களுள், தலை சிறந்த மூவர் தேவாரப்பதிகங்கள் பெற்ற தமிழகக் கோயில்கள் பல உள்ளன. அவற்றுள் ஒன்றாக தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னையம்பதியில் திருமயிலை கபாலீச்சரம் ஆலயத்திற்கு இரண்டு கிலோ மீட்டர் அண்மையில் இராயப்பேட்டை காவலர் பணியகத்திற்கு எதிர் புறம் சுந்தரேஸ்வரர் கோயில் தெருவும் , முத்துத் தெருவும் கூடும் இடத்தில் அமைந்துள்ள சிறப்பை பெற்றது சித்தி புத்தி விநாயகர் ஸ்ரீசுவர்ணாம்பிகை உடனுறை சுந்தரேஸ்வரர் ஆலயம் ஆகும்.

## மூலவர் மற்றும் உற்சவர் மூர்த்திகளின் சிறப்பு

இத்திருக்கோயில் மூலவர் மூர்த்தி அருள்மிகு விநாயகர் சித்தி, புத்தி என்ற இரு அம்மன்களுடன் எழுந்தருளி அருள்பாலிக்கும் சிறப்பு அற்புதமாக அமைந்துள்ளது.

கோயிலின் முகப்பை கடந்து உள்ளே சென்றவுடன் நாற்புறமும் அடிப்பகுதியில் தெய்வத் திருவடிவங்களையுடைய கொடி மரம், நந்தியை வணங்கி கோயில் மண்டபத்தின் உட்சென்று கிழக்கு முகமாயுள்ள துவாரபாலகரை அடுத்து மூலமூர்த்தியாம் இலிங்க வடிவ சுந்தரேஸ்வரரை மன, மொழி, மெய்யால் வணங்கி தென் திசை நோக்கி கருவறையில் எழில் வண்ணத் திருக்கோலத்தில் ஒயிலாய் நின்றருளும் அருள்மிகு சுவர்ணாம்பிகையைக் கண்டு கரங்கூப்பி துதிக்கலாம். பின்னர் அம்பிகைக்கு வலப்புறத்தில் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத கதிர் காம வேலரையும், இடப்புறம் ஸ்ரீ நடராஜர், சிவகாம வள்ளியுடன் மாணிக்கவாசகரையும் சேவிக்கலாம்.

இக்கோயிலில் சிறப்பு அம்சமாக 6½ அடி உயரத்தில் இராமலிங்க அடிகளின் வெண்சுதை சிற்பம் தனி சந்நிதியில் அமையப் பெற்றுள்ளது. ஸ்ரீ ஐயப்பனுக்கு என தனி சன்னதி கேரளா பாணியில் உள்ளது. பெருந்திரளாய் மாலை அணிந்து, விரதமிருந்து இருமுடிதாங்கி மகர ஜோதி காணும் புனித பயணத்தை கார்த்திகை முதல் தை மாதம் சங்கராந்தி வரை ஐயப்பமார்கள் பெருந்திரளாய் பூஜை முடித்து புறப்பட்டுச்செல்வர்.

சோமாஸ்கந்தர் , சித்திபுத்திகணபதி , வள்ளி தேவசேனாவுடன் சுப்பிரமணியர், சந்திரசேகரர், அம்மன், பிரதோசமூர்த்தி, அம்மன் மயில் மீது

வலக்கால் ஊன்றி நிற்கும் முத்துக்குமாரசுவாமி , பழநியாண்டவர், சுவர்ணாம்பிகை , சுக்கிரவார அம்மன், ஆடல்வல்லான், சிவகாமி, சண்டிகேஸ்வரர், தேவாரமூவர் , மாணிக்கவாசகர், சேக்கிழார், அருணகிரிநாதர், ஐயப்பன் செருக்காத்தம்மன் ஆகிய விக்ரகங்கள் பேரழகும், முகப்பொழிவும் காண்பார் உளம் ஈர்க்கும் தன்மையாய் திகழ்பவை.

இக்கோயிலில் சுற்றுப்பிரகாரம் ஒன்றுதான் எனினும் தென்புறத்தில் புதிதாய் அமைந்துள்ள சுவர் சுதைச் சிற்பங்களாக திருப்பரங்குன்றம் முருகர் தெய்வானை திருமணக்காட்சியும் , திருச்செந்தூர் ஜயந்தி நாதனையும், தந்தைக்கு உபதேசம் செய்யும் சுவாமிநாதனையும், சிவசக்தியைச்சுற்றி வந்து மாங்கனி பெறும் வேழமுகத்தனையும் , திருத்தணிகைவேலன், வள்ளி தேவசேனாவுடனும், பழமுதிர் சோலைமலை முருகனையும் எழில் ததும்பும் வண்ணத் திருக்கோலத்தில் ஒரே வரிசையில் அறுபடை வீட்டு மூர்த்திகளை கண்டு மகிழலாம்.

சுவர்ணாம்பிகைக்கு நேர் எதிரில் வெளிச்சுற்றில் அன்னையை அபிராமி பட்டர் பூஜிக்கும் திருக்காட்சி பக்தர்கள் விழிகட்கு நல்விருந்தூட்டும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

இத்திருத்தலத்தில் கருவறைகளின் கோபுரத்தைச் சிற்பங்கள் புதுப்பொலிவுடன் வண்ண மெருகுடன் கண்டு மகிழத்தக்கன. மேலும் சண்டிகேஸ்வரர், சிவசூரியன், பைரவர், சனீஸ்வரருக்கு தனிசன்னதி களில் வழிபாட்டுக்கு உரியதாய் உள்ளன.

நவகிரகங்களுக்கு என சிறிய நாற்கால் மண்டபத்தில் சனியன்று பக்தர்கள் சுற்றி வந்து வழிபட வசதியாய் உள்ளது.

இக்கோயிலின் பிரதான சதுர மண்டபம் 16 கல் தூண்களிலும் கலை நயமிக்க சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஸ்ரீ ஆஞ்சநேயர் சிற்பம் சிறப்பு வழிபாட்டுக்கு உரியது.

## வரலாற்று சிறப்பு

இத்திருக்கோயில் பல ஆண்டுகளுக்கு முன்பு அருள்மிகு சித்தி புத்தி விநாயகர் மட்டுமே எழுந்தருளி அருள்பாலித்து வந்த ஒரு விநாயகர் கோயிலாகவேஇருந்து வந்தது. பின்பு காலப்போக்கில் பல தனவந்தர்கள் மற்றும் ஆன்மிக புரவலர்களின் தீவிர முயற்சியினால் அருள்மிகு சுவர்ணாம்பிகை மற்றும் அருள்மிகு சுந்தரேஸ்வரர் சன்னதிகள் உருவாக்கப்பட்டு ஒரு பெரிய சிவன் கோயிலுக்கு உள்ள அனைத்து பரிவார மூர்த்திகளும் , அம்சங்களும் அமையப் பெற்றுள்ள திருக்கோயிலாக உருவாக்கப்பட்டது.

## பிரார்த்தனை சிறப்பு

அருள்மிகு சித்தி,புத்தி அம்மனுடன் விநாயகர் மூலவர் மூர்த்தி இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பதால் திருமணத் தடை, கல்வி செல்வம் வேண்டி பக்தர்கள் சிறப்பு பூஜை செய்து விநாயகர் அருள்பெற அருகம்புல் மாலை சாற்றி அர்ச்சனை செய்து வருவது வழக்கமாக உள்ளது. மேலும் இத்திருக்கோயிலில் தட்சிணாமூர்த்திக்கு வியாழக் கிழமைகளில் சிறப்பு வழிபாடு நிகழும் மற்றும் விஷ்ணு, பிரம்மா கடவுளருடன், ஸ்ரீ துர்க்கைக்கென தனி சிறு சன்னதி உண்டு. செவ்வாய் , வெள்ளி, ஞாயிறு நாட்களில் இராகு காலத்தில் பெண்டிர் கூடி வழிபாடு செய்வர். பழநி ஆண்டவர் சன்னதி முன் கந்த சஷ்டி நாட்களில் பக்தர்கள் ஒருதின இலட்சார்ச்சனையில் ஆர்வமுடன் கலந்து வழிபடுவர்.

## கல்வெட்டு சிறப்பு

இவ்வாலயத்திற்கு பல மெய்யன்பர்கள் அறக்கட்டளைகள் மூலம் விழாக்கள் நடத்திட, போதிய நிதி வழங்கியும் வாரிசு இல்லாதவர்கள் இல்லங்கள், மனைகள் கடைகளை தானமாக அளித்தும், தேவஸ்தான சார்பில் சிறப்பு வழிபாடுகள் நிகழ உதவியுள்ளதற்கு கல்வெட்டு ஆவண சான்றுகள் உள்ளன. வள்ளலாரின் வாழ்க்கைக் குறிப்பு அருட்பா பாடல்கள் 2 கல் வெட்டுடன் பதிந்துள்ளன.